மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடியைப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்திய அரசும், நம்முடைய மாநில அரசும் எதிர்பாராத அளவிற்கு அது இப்பொழுது திறமையாகச் செயல்பட்டு வருகிறது. அதனால்தான் இப்பொழுது நிலக்கரி பற்றாக்குறையே ஏற்பட்டது. இல்லையென்றால் நிலக்கரி பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது. நீங்கள் போய்ப் பார்த்தபோது இருந்த குறைகளைச் சொன்னீர்கள்: பார்த்த நேரம் அப்படி.....

(முற்பகல் 9.20)

திரு. எஸ். என். இராமசாமி: துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்கப்பட்டிருக்கின்ற இடம் கடற்கரைப் பகுதியாக இருப்பதால் அங்கே போடப்பட்டுள்ள லைன்கள் அத்தனையும் அலுமினியக் கம்பிகளாகப் போட்டிருப்பதால், அவை சரியான நிலைமையில் இல்லை. ஆகவே அங்கே போடக்கூடிய லைன்கள் அத்தனையும் செம்புக் கம்பியாகப் போடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, செம்புக் கம்பிகள் அங்கே இருப்பதற்கு என்ன உத்தரவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தருவார்கள் என்பது தெரியவில்லை. ஆகவே அது சாத்தியம் இல்லை.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு ரப்பர் தோட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம்

332—

*வினா எண் 9866—திரு. பொ. விஜயராகவன்; மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் அரசு ரப்பர் தோட்டங்களினால் 1977-78, 1978-79, 197980-, 1980-81 ஆகிய வருடங்களில் அரசுக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு?

(ஆ) லாபம் ஈட்டிய பின்னரும் அரசு ரப்பர் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குத் தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளிகளுக்கு அளிப்பதுபோல் போனஸ் வழங்காதிருக்கும் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்; (அ)

ஆண்டு (1)	நிகர வருமானம். (2) (ரூபாய் இலட்சத்தில்)	இழப்பு. (3) (ரூபாய் இலட்சத்தில்)
1977-78	3.43	..
1978-79	24.87	..
1979-80	..	34.52
1980-81	61.32	..

1984 மார்ச் 16]

(ஆ) 1965ஆம் ஆண்டு போனஸ் சட்டம், அரசின் கீழ் இயங்கும் நிறுவனங்களுக்குப் பொருந்தாத காரணத்தினால், கன்னியாகுமரி அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்கவில்லை.

திரு டி. மணி: துணைத் தலைவர் அவர்களே, அரசு இரப்பர் தோட்டத்திலே ஏற்பட்ட இலாபத்தையும், இழப்பையும் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள். ஆனால் மேலும் அதிகப்படியான இலாபத்தைப பெறுகின்ற வகையிலே அங்கே கிடைக்கின்ற பொருளைச் சரியாகப் பராமரிக்கப்படாத நிலைமை இருக்கின்றது. ஏற்கெனவே 1983 ஆம் ஆண்டில் கடைசிச் சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது ஒரு தகவலை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கொடுத்தேன். 100 டன்னுக்கு அதிகமான ஸ்க்ரேப் மழையிலும், வெய்யிலிலும் கிடந்து கிலோ பத்து ரூபாய் என்ற அளவுக்குச் செல்லவேண்டியது கிலோ 2 அல்லது 3 ரூபாய்க்குத்தான் செல்லுகின்ற ஒரு துரதிர்ஷ்டமான நிலைமை அந்த ஃபேக்டரியில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமைகளைக் களைந்தால் இன்னும் அதிகப் படியான இலாபத்தை ஈட்ட முடியும். எனவே இதனைச் சரியாகப் பராமரிப்பதற்குரிய தகுந்த நடவடிக்கை எடுத்து அதிகப் படியான இலாபத்தைப் பெறுகின்ற வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் தெரிவித்த அந்த கருத்தின் அடிப்படையில் ஆய்வுகள் எல்லாம் நடத்தப்பட்டன; மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற விவரங்களின்படி முழுமையாக அங்கே தவறினாலோ அல்லது கவனக்குறைவினாலோ நிகழவில்லை என்று தெரிகின்றது இருந்தாலும் அங்கே பல வசதிக் குறைவு காரணமாக, நிர்வாகத்தில் அவர்களுக்கு உள்ள சிக்கல்கள் காரணமாக பல குறைகள் இருக்கின்றன என்பது கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டது. அவைகளை எல்லாம் விரைவிலே நீக்கி நல முறையில் அந்த இரப்பர் தோட்டத்தினுடைய வியாபாரப் பணியையும், தொழிற்சாலையையும் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வருடா வருடம் இந்தத் தோட்டங்களிலிருந்து இலாபம் கிடைத்து வருகின்றது என்றும் ஆனால் 1965 ஆம் ஆண்டின் போனஸ் சட்டப்படி போனஸ் கொடுக்க இடம் இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். 1982—83ல் போனஸ் என்ற அந்த கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதன்படி அங்கே போனஸ் கொடுக்க இயலாததன் காரணத்தால் அந்த இரப்பர் தோட்டங்களை ஒரு வாரியமாக அமைத்து அவர்களுக்குப் போனஸ் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக இந்த அவையிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் அந் வாரியம் அமைக்கவில்லை. அது எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள். ஒரே நேரத்தில் நிறையக் கேள்விகள் போடவேண்டாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே 1982-83லே எக்ஸ்-க்ரேஷியா கொடுக்கப்பட்டதுபோல் 1983-84—லேயும் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன், துணைத் தலைவர் அவர்களே, இங்கே வருமானம் வருகின்றது, ஆகவே ஏன் போனஸ் தரவில்லை என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். நான் சில வருடங்களில் வருமானத்தைச் சொல்லி இருக்கிறேன். நட்டத்தையும் சொல்லி இருக்கிறேன். பொதுவாக இந்த இரப்பர் தோட்டம் 1961-லே தொடங்கியதற்குப் பிறகு சுமார் 15 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் பதினொன்றே முக்கால் கோடி ரூபாய் தான் வருவாய் வந்திருக்கின்றது. ஆகவே நிகர வருமானம் என்பது அந்தந்த ஆண்டிலே நம்முடைய முதலீட்டைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் தருகின்ற கணக்காகும். இருந்தாலும் தொழிலாளர்களுக்கு தரப்படவேண்டிய அடிப்படை உரிமைப்படி நாம் போனஸ் தருவதற்கு முடியாத ஒரு சூழ்நிலை இருந்ததைத் தான் கடந்த ஆண்டிலே தெரிவித்தோம்.

இங்கே அரசாங்கம் ஒப்புக்கொண்டு போனஸ் வழங்கியது என்று சொன்னார்கள். அரசாங்கம் போனஸ் தருவதாக ஒப்புக்கொள்ளவில்லை. எக்ஸ் க்ரேஷியா என்ற அடிப்படையில் தான் ஒரு மாத ஊதியம் தரலாம் என்று முடிவு எடுத்து அவர்களுக்கு வழங்கியிருக்கிறது. இப்போது அந்த ரப்பர் தோட்ட நிறுவனத்தை ஒரு கழகமாக அமைப்பதற்கு ஆணை பிறப்பித்து அதற்கான அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பெற்று எந்த அடிப்படையில் அதைப் பதிவு செய்ய வேண்டும் என்ற விதிகளையெல்லாம் அரசாங்கம் இப்போது ஆணையாகப் பிறப்பித்திருக்கிறது. கழகம் அமைப்பதற்கான அந்தப் பணி நடைபெற்றுவருகிறது. 1984-85ல் எக்ஸ் க்ரேஷியாவாக கொடுக்க வேண்டுமா அல்லது போனஸ் கொடுப்பதா என்பதை அங்கு அமைய இருக்கிற அந்த ரப்பர் தோட்டக் கழகம் முடிவு செய்யும்

திருவொற்றியூர் தியாகராயர் சுவாமிகள் ஆலயம்

333—

* வினா எண் 15880—திரு ப. வெங்கடசுப்பிரமணியம்; மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தியாகராயர் சுவாமிகள் ஆலயத்தை அரசு நியமித்த அறங்காவலர் வசம் ஒப்படைக்கப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு இதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?